THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
IN THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | **CC.No.307/2020** | **PW.3** |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| Name | : திரு. நெல்சன் | |
| Father's Name | : திரு.செல்வர் | |
| Village | : மன்னார்புரம் | |
| Taluk | :திசையன்விளை | |
| Employment | :பெயின்டர் | |
| Age | :47 | Date: 17.08.2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**( A2 Present, A1 absent and petition U/s.317 Cr.P.C is filed and allowed)**

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து பெயின்டர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் இரண்டாம் எதிரியை தெரியாது. வழக்கின் மற்ற எதிரியை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான்**(அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் பைப் லைன் தோண்டுவதற்காக வடக்கூர் சென்றபோது போலீசார் கையொப்பம் கேட்டார்கள் செய்து கொடுத்தேன். இவ்வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. **(நீதிமன்ற கேள்வி– யாராவது உங்களை**

**மிரட்டினார்களா என்றால் என்னை யாரும் மிரட்டவில்லை. நானாகவே சாட்சியம் அளிக்கிறேன்.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. போலீசார் விசாரணையில் கடந்த 26.09.2017 ஆம் தேதி காலை 12.30 மணிக்கு விஜயநாராயணம் காவல் ஆய்வாளர் வாகன தனிக்கையின் போது, இவ்வழக்கின் எதிரிகளை பிடித்து விசாரித்த போது, எதிரி முத்து துரை ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் நானும், குருஸ்மாணிக்கம் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், பின்னர் எதிரி முத்து துரை தந்த தகவலின் அடிப்படையில் வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை எங்கள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு வேண்டி உண்மையை மறைத்து அரசுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. இல்லை.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.08.17 16:58:42 +0530

Judicial Magistrate,
Valliyoor.